# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - 17.04.2025</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 16813/SCIC/2023</u>**

திரு மு.மாரியப்பன் த/பெ.முத்துகிருஷ்ணன் — மேல்முறையீட்டாளர்
எண்.2/6இ முனையாடுவார் நாயனார் தெரு
பாளையங்கோட்டை
திருநெல்வேலி - 627 002.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
எஸ்டேட் அலுவலர்
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ...... பொதுஅதிகார அமைப்பு
திருநெல்வேலி கோட்டம்
என்.ஜி.ஓ. பி காலனி விரிவாக்கம்
பெருமாள்புரம், திருநெல்வேலி-7

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 22/06/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர், கொக்கிரக்குளம், பாளையங்கோட்டை-க்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பொருள்:திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தாலுகா, சமாதானபுரம், மனகாவலம் பிள்ளை நகர், சர்வே எண்.666/1A1 - சம்பந்தமாக - மேற்படி மனகாவலம்பிள்ளை நகரில் உள்ள 32.10 ஏக்கர் நிலங்கள் அரசின் வழிகாட்டுதலின்படி குடிசை மாற்று வாரியத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் உத்தரவும் வழங்கப்பட்டது. அதன்படி சுமார் 950 மனைகள் ஏழை மக்களக்கு ஒதுக்கப்பட்டது. அந்த வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு மனைக்கும் தொகையும் செலுத்தி

வருகிறோம். மேற்படி 950 மனைகள் ஒதுக்கப்பட்ட ஏழை பயனாளிகள் விபரத்தை தகவலாக வழங்குக" என்பன போன்று 7 (ஏழு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத்தகவல் அலுவலர்/தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருநெல்வேலி கோட்டம், பெருமாள்புரம் திருநெல்வேலி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.650/நி.எ./2021, நாள் 28/07/2023 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார். மனுதாரர்/மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 03/08/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். அதற்கு, மேல்முறையீட்டு அலுவலர்/ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருநெல்வேலி கோட்டம், பெருமாள்புரம் திருநெல்வேலி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.1764/நி.எ./2021, நாள் 13/09/2023 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

2. அதன் பின்னர், மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் 22/09/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 16813/SCIC/2023 ஆக பதிவு செய்தது. அதன் பின்னர், பொதுத் தகவல் அலுவலர்/ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருநெல்வேலி கோட்டம், பெருமாள்புரம் திருநெல்வேலி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.650/நி.எ./2021, நாள் 30/09/2024 வாயிலாக ஏற்கெனவே 13/09/2023 தேதியிட்டு அனுப்பிய கடிதத்தின் நகலை இணைத்து அனுப்பியுள்ளதோடு, அதன் விவரத்தை ஆணையத்திற்கும் தெரிவித்துள்ளார். பின்னர், மனுதாரர் 30/09/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது காணொளி காட்சி வாயிலான விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 17/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு மனுதாரருக்கும், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரில் ஆஜராகுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**4. இன்று ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில் ஆணையத்தின் முன் திரு.ஆர்.குமரன், எஸ்டேட் அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருநெல்வேலி கோட்டம் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 28/07/2023 மற்றும் 30/09/2023 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாகவும், மீண்டும் 30/09/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக, மனுதாரரை 09/10/2024 அன்று அலுவலகத்திற்கு வருகை தர தெரிவித்திருந்ததாகவும், ஆனால் மனுதாரர், அலுவலகத்திற்கு வருகை தரவில்லை எனத் தெரிவித்தார். ஆனால், மனுதாரர், தான் 09/10/2024 அன்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்திருந்தவாறு மேற்குறிப்பிட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலகத்திற்கு சென்றதாகவும், ஆனால் தான் கோரியவாறான கோப்புகளையோ, ஆவணங்களையோ காண்பிக்கவில்லை எனப் புகார் தெரிவித்தார். இருதரப்பினரின் வாதுரைகளும் ஆணையத்தால் கேட்கப்பட்டன.**

**5. எனவே, மனுதாரர், பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு 24/04/2025 அன்று மாலை 04.00 மணிக்கு சென்று, அவர் கோரியவாறான ஆவணங்களை / பதிவேடுகளை ஒரு மணி நேரம் பார்வையிடவும், அதற்கு ஏதுவான நடவடிக்கையினை பொதுத் தகவல் அலுவலர் செய்திடுவதோடு, மனுதாரர் பார்வையிட்ட பின்னர், அவர் கோருகின்ற ஆவணங்களின் / பதிவேடுகளின் நகல்களை சான்றொப்பமிட்டு வழங்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. அதன் பின்னர், பொதுத் தகவல் அலுவலர், நிறைவேற்றுகை அறிக்கையினை 24/04/2025 லிருந்து ஒரு வார காலத்திற்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16813/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
எஸ்டேட் அலுவலர்
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்
திருநெல்வேலி கோட்டம்
என்.ஜி.ஓ. பி காலனி விரிவாக்கம்
பெருமாள்புரம், திருநெல்வேலி-7

**மேல்முறையீட்டாளர்**

திரு மு.மாரியப்பன் த/பெ.முத்துகிருஷ்ணன்
எண்.2/6இ முனையாடுவார் நாயனார் தெரு
பாளையங்கோட்டை
திருநெல்வேலி - 627 002.

RG/PC